# குளித்தலை நகராட்சி

30.09.2019.ஆம் தேதி திங்கட்க்கிழமை மாலை 4.30 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்(பொ)
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) திரு.ந.புகழேந்தி அவர்களின் செப்டம்பர் 2019.ஆம் மாத தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 02. குளித்தலை நகராட்சிப் பகுதியில் அரசு மருத்துவமனை வளாகத்தில் Day NULM 2018-2019.ன்கீழ், சிறப்பு தங்குமிடம் கட்டுமான பணிக்கு ரூ.65.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்ற தீர்மானம் எண்.34, நாள்–06.03.2019.ல் அனுமதி பெற்று, 14.08.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி பகுதியிலான அரசு மருத்துவமனை வளாகத்தில் சிறப்பு தங்குமிடம் அமைத்தல் பணி மேற்கொள்ளுதல் | திரு.R.N.வெங்கடாஜலபதி, 2/20,சௌண்டீஸ்வரிஅம்மன் கோவில்தெரு, குளித்தலை. | 4.95% அதிகம் |
| | | திரு.M.செந்தில்குமார், 63,பெரியார்நகர் குளித்தலை. | தொழில்நுட்ப தகுதியற்றதால் நிராகரிக்கப்பட்டது. |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்க கூடுதலாக இருந்த காரணத்தால், ஒப்பந்தப்புள்ளியை குறைப்பு செய்து கொடுக்கும்படி தொழில்நுட்ப தகுதிவாய்ந்த (Negotiation) ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.R.N.வெங்கடாஜலபதி அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியை குறைத்து வழங்குமாறு 23.09.2019 அன்று இவ்வலவலகத்தில் இருந்து கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி, திரு.R.N.வெங்கடாஜலபதி, ஒப்பந்ததாரர், மேற்கண்ட கடிதத்திற்கு, கட்டுமான பொருட்கள், சாலை மற்றும் கட்டிட பணியாளர்கள் கூலி ஆகியவை விலையேற்ற. காரணமாக இனி குறைக்க இயலாது என இறுதிசெய்த பதில் கடிதம் வழங்கியுள்ளார். எனவே, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வழங்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1) . நகராட்சி நிர்வாகம், பொறியாளர் கையேடு தொகுதி–I, பத்தி 2.7.2 பக்கம் எண்.9.ல்,பணியின் அவசர அவசியம் கருதி, மதிப்பீட்டு விகிதத்திற்கு 5% வரை கூடுதலாக முதல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பிலேயே வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கட்டுடுமான பொருட்கள் விலையேற்றத்தினாலும், கட்டுமான தொழிலாளர்கள் கூலியேற்றத்தினாலும், மதிப்பீட்டிற்கு 4.95% கூடுதலாக வழங்கியுள்ள திரு.R.N.வெங்கடாஜலபதி, ஒப்பந்ததாரர், குளித்தலை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, L.O.A. வழங்கவும், ஒப்பந்தப்பத்திரம் மற்றும் 2% வைப்புத் தொகையினை பெற்று பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1804/2017/இ1)

பொருள்– 03. இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்களுக்கு 2019–2020.ஆம் ஆண்டுக்கான சீருடைகள் Tamil Nadu Textile Corporation Ltd., Coimbatore என்ற அரசு சார்பு நிறுவனத்திடம் பணியாளர்களுக்கு சீருடை வாங்கி வழங்குவதற்கும் மற்றும் தையல்கூலி வாங்கி வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2231/2019/எச்1)

பொருள்– 04. குளித்தலை நகராட்சி அம்மா உணவகத்தின் 3–எச்.பி. கிரைண்டரின் மின்மோட்டார் பழுது ஏற்பட்டு உள்ளது. அவசர அவசியம் கருதி பழுதான மின்மோட்டாரின் காயிலை புதுப்பித்து சரிசெய்ய 26.08.2019.ல் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | நிறுவனங்கள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1) | 3–எச்.பி. மோட்டார் ரீவைண்டிங் செய்தல். | 1). ஸ்ரீ பாலாஜி ரீவைண்டிங் ஒர்க்ஸ், குளித்தலை. | ரூ.3,800/– |
| | | 2). ராசி எலக்ட்ரிக்கல்ஸ், சுங்ககேட், குளித்தலை. | ரூ.3,900/– |
| | | 3). ராஜ் எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், தெற்குதெரு, குளித்தலை. | ரூ.3,950/– |

அலுவலக குறிப்பு– 1). வரிசை எண்.1.ல் ஆன குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீபாலாஜி ரீவைண்டிங் ஒர்க்ஸ் நிறுவன விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2). செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3). ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும், செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1927/2019/இ1)

*******

# <u>குளித்தலை நகராட்சி</u>

30.09.2019.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 170 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 171 | அனுமதி அளிக்கப்பட்டது. |
| 3 | 3 | 172 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 4 | 4 | 173 | அங்கீகரிக்கப்பட்டது. |

ஒம்/– ந.புகழேந்தி,
நகராட்சி பொறியாளர்,
ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர்(பொ),
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்(பொ),
குளித்தலை நகராட்சி.